1982 ஏப்ரல் 13]

சொல்கிறார்கள். கலப்படத்தைப் பொறுத்தவரையில், எந்த மாதிரியான கலப்படம் செய்தாலும் எப்படிச் செய்தாலும் கலப்படம், கலப்படம்தான். அந்த நோக்கத்தில்தான் அரசாங்கம் அந்த இலாகா—நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, உயர்தரப் பசுக்கள் கொடுக்கும் பால் கொழுப்புச் சத்து குறைவாகவும், இதரச் சத்துக்களும் மற்ற பசுக்கள் கொடுப்பதைவிடக் குறைவாகவும் இருப்பதால் நல்ல பாலாகக் கொடுத்தாலும், அதில் கலப்படம் இருப்பதாகச் சொல்லி, தண்டனை வழங்கப் படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? மேலும், அந்தப் பசு இருக்கும் சீதோஷ்ண நிலைமை, அதற்குக் கொடுக்கப் படும் 'பீட்ஸ்' ஆகியவையும் இப்படிப்பட்ட முறையில் பால் கொடுப்பதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இவையெல்லாம் கலப்படம் ஆகாது என்பதைத் தெளிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே கலப்படம் செய்பவர்களுக்கு கன்செஷன் கொடுக்கின்ற வகையில் பேசுவது நன்றாக இருக்காது. இருந்தாலும் கூட இந்தக் கலப்படத்தைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புகிறேன். பேட் கன்டென்ட் கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதால் கலப்படம் என்று சொல்லிவிட மாட்டார்கள். பாலில், அந்த லாக்டோமீட்டர் போட்டுப் பார்த்தவுடன், உடனே அதில் தண்ணீர் எவ்வளவு கலந்து இருக்கிறது என்பது தெரியும். அதை வைத்துத்தான் கலப்படத்திற்கான குற்றம் சாட்டப் பட்டு, தண்டனை வழங்கப்படுகிறது. ஆகவே, இதிலே எந்தவிதமான தாட்சண்யத்திற்கும் இடம் அளிக்கத் தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நினைக்கிறேன்.

மருத்துவத் துறையிலிருந்து மருந்தியல் துறையைத் தனியாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண்- 744 திரு. ந. குலசேகரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மருத்துவத் துறையில் இருந்து மருந்தியல் துறை எப்பொழுது தனியாகப் பிரிக்கப்படும்?

(ஆ) அவ்வாறு பிரிக்கப்படும் பொழுது அந்தத் துறையை சேர்ந்தவரே துறைத் தலைவராக நியமனம் செய்ய அரசு முன்வருமா?

[1982 ஏப்ரல்

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) 13-1-81 தேதியிட்ட சுகாதாரத்துறை அரசு ஆணை (நிலை) எண் 2084-ன் படி மருந்தியல் துறை தனியாகப் பிரிக்கபபட்டு விட்டது. அத்துறையைச் சேர்ந்தவரே அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வி. ப. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தியல பட்டதாரிகளும், மருந்து உற்பத்தியாளர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இங்கே ஓராணடு காலத்திற்குள மருத்துவத் துறையில் இருந்து மருந்தியல் துறையைப் பிரித்து, தனியாக மருந்தியற் துறை இயக்குனரகம் ஏற்படுத்தி, மருந்தியல் துறையைச் சேர்ந்தவரையே அதற்குத் தலைவராக நியமித்திருப்பதற்காக நான் மாண்புமிகு அமைசசர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆனால், மருந்திலே கலப்படம் செய்வதைப் பரிசோதனை செய்வதற்கான பரிசோதனைக் கூடம் மட்டும் இன்றும் மருத்துவத்துறையில் இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், இந்திரர்கள் மாறினாலும், இந்திராணி மாற மாட்டார் என்பதுபோல் இருக்கிறது. இப்போது புதிதாக மருந்தியல் துறை ஆரம்பிக்கப்பட்டு இருப்பதால், இந்த மருந்துகள் பரிசோதனைக் கூடத்தையும் அந்தத் துறையிடத்தில் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வி, வி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லக் கூடிய அந்த பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மருத்துவத் துறை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு -தனித்தனியாக டைரக்டர்கள் நியமிக்கப்பட்டு அது இயங்கி வருகிறது. எனவே இப்போது இந்த மூன்றுக்கும் சேர்த்து ஒரு தனி டைரக்டர் ஜெனரல் போடுகின்ற உத்தேசம் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது உண்மையா? ஆமெனில் அமைச்சரவர்கள் அது பற்றிப் பதிலளிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

கடலூர் மருத்துவமனையில் மருத்துவ சித்தப் பிரிவு அமைக்கும் திட்டம்.

*வினா எண் 745:— திரு.எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-